**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – மனிதவள மேம்பாட்டு குறியீட்டின்படி பின்தங்கிய 8 மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவ, மாணவியர்களுக்கு 2012–2013 ஆம் ஆண்டுக்கான சிறப்பு வழிகாட்டி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந2) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.144 நாள்.24.12.2012

நந்தன மார்கழி 9
திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்க:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.டி1/1419/12, நாள்.15.5.2012.

------

**ஆணை:-**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இத்துறையின் 2012–13 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் போது கீழ்க்கண்ட புதிய அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

**மனிதவள மேம்பாட்டு குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய 8 மாவட்டங்களில் மாணவ, மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டி வழங்குதல்**

“பெரம்பலூர், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, கடலூர் ஆகிய 8 மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் பயிலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதும் 2,21,400 மாணவ, மாணவியருக்கு ரூ.2.47 கோடி செலவில் சிறப்பு வழிகாட்டி (Special guide) வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்”

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், பெரம்பலூர், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, கடலூர் ஆகிய 8 மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 மற்றும் 12–ஆம் வகுப்பில் தமிழ்வழிக்கல்வி பயிலும் 2,21,400 பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர்

மாணவ, மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டிகள் வழங்குவதால் அரசுக்கு கீழ்க்காணும் விவரப்படி ரூ.2.47 கோடி செலவினம் ஏற்படும் என்றும், இம்மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதால் மாணவர்களது பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினை கணக்கில் கொள்ளாமல் அனைத்து பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு சிறப்பு வழிகாட்டிகளை வழங்கலாம் என்றும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:

| துறை | 10 ஆம் வகுப்பு | | 12 ஆம் வகுப்பு | | மொத்த மாணவர் எண்ணிக்கை | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் எண்ணிக்கை | தொகை | மாணவர் எண்ணிக்கை | தொகை | | |
| பிவ | 52397 | 4506142 | 40795 | 5996865 | 93192 | 10503007 |
| மிபிவ | 76198 | 6553028 | 52010 | 7645470 | 128208 | 14198498 |
| மொத்தம் | 128595 | 11059170 | 92805 | 13642335 | 221400 | 24701505 |

3. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்றுக் கொண்டு, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், திண்டுக்கல், சிவகங்கை, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ / மாணவியர்களுக்கு இலவசமாக சிறப்பு வழிகாட்டிகள் வழங்கும் திட்டத்திற்கு 2012–2013 ஆம் ஆண்டிற்கு ரூ.2.47 கோடி (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து ஏழு இலட்சம் மட்டும்) வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வரவு வைக்கப்பட வேண்டும்:

<u>பிற்படுத்தப்பட்டோர் கணக்குத் தலைப்பு</u>

<u>10 ஆம் வகுப்பு ரூ.45,06,142/–</u>

2225–ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II -மாநிலத் திட்டம் – JE – மெட்ரிகுலேஷனுக்கு முந்தைய வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை – 12 – படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித்தொகைகளும் – 09 – ஏனையவை
(த.தொ.கு. .2225 – 03 –277– JE -1296)

**<u>12 ஆம் வகுப்பு ரூ.59,96,865/–</u>**

**2225–**ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் **– 03 –** பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் **– 277 –** பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் **– II -**மாநிலத் திட்டம் **–** JF **–** மெட்ரிகுலேஷனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை – **12** – படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித்தொகைகளும் **– 09 –** ஏனையவை
(த.தொ.கு. .2225 – 03 –277– JF -1294)

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் கணக்குத் தலைப்பு</u>

**<u>10 ஆம் வகுப்பு ரூ.65,53,028/–</u>**

**2225–**ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் **– 03** பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் **– 277 –** கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் **– II -**மாநிலத் திட்டம் **–** KE – மெட்ரிகுலேஷனுக்கு முந்தைய வகுப்புகளில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை – **12** – படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித்தொகைகளும் **– 09 –** ஏனையவை
(த.தொ.கு. .2225 – 03 –277– KE -1295)

**<u>12 ஆம் வகுப்பு ரூ.76,43,965/–</u>**

**2225–**ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் **– 03** பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் **– 277** – கல்வி **–** பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் **– II -**மாநிலத் திட்டம் **–** KF **–** மெட்ரிகுலேஷனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை – **12** – படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித்தொகைகளும் **– 09 –** ஏனையவை
(த.தொ.கு. .2225 – 03 –277– KF -1293)

**5.** மேலே பத்தி **3–**ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ஒரு ‘‘புதுப் பணி’’ குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி(வ.செ.பொது–I)த் துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான தொகையை முன்பணமாக வாங்குவதற்கு விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் நிதி(வ.செ.பொது–I)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் **2012–13–**ம் ஆண்டுக்கான இச்செலவினத்தை துணை மான்ய கோரிக்கையில் சேர்ப்பதற்குரிய விளக்க குறிப்பினை உரிய தருணத்தில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும்

2012–13 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்திற்கான முன்மொழிவுகள் நிதித்துறைக்கு அனுப்புமாறும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.எண்.58507/நிதி(பிமிபி)/2012, நாள்.26.10.2012–ல் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1398. (ஆயிரத்து முன்னூற்று தொண்ணூற்று எட்டு)

**ஆளுநரின் ஆணைப்படி**

**தங்க கலியபெருமாள்,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை–5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை – 5.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
மாநில கணக்காயர் (தணிக்கை I), சென்னை –6.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை –5.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதித்(பிமிபி/வ.செ.பொது–I /வ.செ.பொது–II)துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.